செ. கு. எண்: 074 நாள்: 15.05.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 15.5.2018

---

புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. பாலகுமாரன் அவர்கள் இன்று (15.5.2018) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

எழுத்துச் சித்தர் என்று போற்றப்படும் திரு.பாலகுமாரன் அவர்கள் நூற்றுக்கணக்கான சிறுகதைகள், இருநூற்றுக்கும் அதிகமான நாவல்களையும், பல கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். திரு. பாலகுமாரன் அவர்கள் எழுதிய மெர்க்குரி பூக்கள், இரும்பு குதிரைகள் ஆகிய நாவல்கள் மிகவும் பிரபலமானவை. திரு.பாலகுமாரன் அவர்கள் சில தமிழ் திரைப்படங்களுக்கு திரைக்கதை வசனங்களையும் எழுதியுள்ளார்.

திரு. பாலகுமாரன் அவர்களுக்கு 16.1.2018 அன்று நடைபெற்ற விழாவில் அவருக்கு தமிழ்த் தென்றல் திரு.வி.க விருது வழங்கியது இன்றும் பசுமையாய் எனக்கு நினைவில் இருக்கிறது.

திரு.பாலகுமாரன் அவர்கள் கலைமாமணி விருது, இலக்கிய சிந்தனை விருது போன்ற பல விருதுகளையும் தனது எழுத்துப் பணிக்காக பெற்ற பெருமைக்குரியவர்.

அனைவரிடமும் அன்பாக பழகக்கூடியவரும், இலக்கியத் துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவருமான திரு.பாலகுமாரன் அவர்களின் மறைவு தமிழ் இலக்கியத் துறைக்கு ஒரு பேரிழப்பாகும்.

திரு.பாலகுமாரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், எழுத்துலக நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**